செய்திவெளியீடு எண்.49/2018 நாள் 19.09.2018

# மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை தயார்படுத்தி வைக்க சென்னைக்குடிநீர் வாரியம் வேண்டுகோள்

------

மழைநீர் சேகரிப்புத் திட்டம், இந்தியாவிலேயே முன்னோடி திட்டமாக தமிழகத்தில் செயல்படுத்தபட்டு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இத்தகைய திட்டத்தை நடைமுறைப்படுத்திய முதல் மாநிலமாக தமிழகத்தை உருவாக்கியுள்ளது.

2003–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின் மூலம், எல்லாக் கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புக்களை ஆகஸ்ட் 2003–ஆம் ஆண்டுக்குள் ஏற்படுத்துவதற்கு கட்டாயமாக்கப்பட்டது. சென்னைக்குடிநீர் வாரியம் புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகளைப் பெறுவதற்கு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புக்களை ஏற்படுத்துவதை கட்டாயமாக்கியுள்ளது.

சென்னைக்குடிநீர் வாரியம், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்துவது மற்றும் பராமரித்தல் பற்றிய விழிப்புணர்வை சென்னை மாநகர மக்களிடையே ஆண்டு தோறும் பருவமழைக்கு முன்பாக ஏற்படுத்தி வருகிறது.

சென்னைக் குடிநீர் வாரியம், தேர்ந்தெடுக்கப்பட்ட 145 கண்காணிப்பு கிணறுகளில், நிலத்தடி நீரின் அளவு மற்றும் நீரின் தரத்தைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இதன் மூலம் நிலத்தடி நீரின் அளவும் தரமும் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இத்தகைய பயனைத் தொடர்ந்து பெற ஏதுவாக, பொதுமக்கள் தங்கள் வீடுகளில் உள்ள மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை, வடகிழக்குப் பருவமழை வருவதற்கு முன்பாக நன்குப் பராமரித்து வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தங்கள் வீடுகளிலுள்ள வடிகட்டும் தொட்டிகளில் நிரப்பியுள்ள மணல் / கூழாங்கல் / கருங்கல் ஆகியவற்றை வெளியே எடுத்து, அவற்றை நீரால் சுத்தம் செய்த பின்பு, மீண்டும் தொட்டியின் அடியில் கருங்கல், நடுவில் கூழாங்கல் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலே மணல் என்ற முறைப்படி நிரப்ப வேண்டும். மேலும் கட்டடங்களில் உள்ள மழைநீர்க் குழாய்களில் ஏதேனும் ஓட்டை / விரிசல் அல்லது அடைப்புகள் இருந்தால் அவற்றைச் சரி செய்து மழைநீர் வீணாகாமல் முழுவதும் பூமிக்குள் செல்வதை உறுதி செய்ய வேண்டும்.

மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை அமைத்தல் மற்றும் பராமரிப்பதில் பொதுமக்களுக்கு ஏதேனும் விளக்கம் தேவைப்பட்டால், சம்பந்தப்பட்ட பகுதி மற்றும் பிரிவு அலுவலகங்களை அணுகி

ஆலோசனை பெற்றுப் பயன் பெறலாம். சென்னைக் குடிநீர் வாரியத்தின் அலுவலர்கள் பொதுமக்களின் வீடுகள் / கட்டடங்களில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை ஆய்வு செய்வார்கள். நிலத்தடி நீர் மட்டம் உயர்வதுடன் அதன் தரமும் மேம்பாடு அடைந்து பயன் பெற பொதுமக்கள் தங்கள் வீடுகளிலுள்ள மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை நன்கு பராமரிக்குமாறு சென்னைக் குடிநீர் வாரியம் கேட்டுக் கொள்கிறது.





சென்னை நகரில் மழைநீர் சேகரிப்பு திட்டத்திற்குப் பின் நிலத்தடி நீர் அளவின் முன்னேற்றம்
கண்காணிப்பு கிணறு அமைந்துள்ள இடங்கள்
புதுவண்ணாரப்பேட்டை
எழில் மருத்துவமனை (தண்டையார்பேட்டை)
உயர்நீதி மன்றம் (ஜார்ஜ் டவுன்)
புளியந்தோப்பு
வில்லிவாக்கம்
அரும்பாக்கம்
சின்மயா நகர்
சிந்தாதிரிப்பேட்டை
ஐஸ் அவுஸ்
பிரிசிடென்சி கல்லூரி, சேப்பாக்கம்
நுங்கம்பாக்கம்
மாம்பலம்
சின்னமலை (சைதாப்பேட்டை)
எம்.ஆர்.சி. நகர் (சாந்தோம்)
பெசன்ட் நகர்
வேளச்சேரி
நிலத்தடிநீர் மட்ட அளவு "மீட்டரில்"
0.00
2.00
4.00
6.00
8.00
10.00
12.00
14.00
16.00
நவம்பர் 2017
நவம்பர்
2004
நிலத்தடிநீர் மட்ட அளவு "மீட்டரில்" நவ ம்பர்'04
நிலத்தடிநீர் மட்ட அளவு "மீட்டரில்" நவ ம்பர்'17




சென்னை நகரில் மழைநீர் சேகரிப்பு திட்டத்திற்குப் பின் நிலத்தடி நீரில் உள்ள
உப்புத்தன்மையின் அளவு (நவம்பர் 2004 – நவம்பர் 2017)
நிலத்தடிநீரில் உள்ள உப்புத்தன்மையின்
6000
5000
4000
3000
2000
1000
0
குடிப்பதற்குரிய நிலத்தடி நீரின்
புது வண்ணாரப்பேட்டை
எழில் ஆஸ்பத்திரி (தண்டையார்பேட்டை)
உயர்நீதிமன்றம் (ஜார்ஜ் டவுன்)
புளியந்தோப்பு
வில்லிவாக்கம்
அரும்பாக்கம்
சின்மயா நகர்
சிந்தாதிரிப்பேட்டை
ஐஸ் ஹவுஸ்
ரெசிடென்சி கல்லூரி, சேப்பாக்கம்
நுங்கம்பாக்கம்
மாம்பலம்
சின்னமலை, சைதாப்பேட்டை
எம்.ஆர்.சி (சாந்தோம்)
பெசன்ட் நகர்
வேளச்சேரி
உப்புத்தன்மை (பிபிஎம்) நவம்பர்'04
உப்புத்தன்மை (பிபிஎம்) நவம்பர்'17

மேலும் இது குறித்த விவரங்கள் அறிய தலைமை அலுவலகத்திலுள்ள மழைநீர் சேகரிப்புப் பிரிவின் தொலைபேசி எண்: **28454080** அல்லது www.chennaimetrowater.tn.nic.in என்ற இணையதள முகவரியைத் தொடர்பு கொள்ள பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர்